**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

**"அனைவரும் கற்போம்"** **"அனைவரும் உயர்வோம்"**

அனுப்புநர்

மாநில திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
சென்னை – 600 006.

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்கள் /
மாவட்ட திட்ட அலுவலர்கள்,
அனைத்து மாவட்டங்கள்

ந.க.எண்: 1845/அ 11/பயிற்சி/ஒபக/2021 நாள்: 18.08.2021

அய்யா / அம்மையீர்,

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – 2021–22 ஆம் கல்வியாண்டில் அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு இணைய வழியாக அடிப்படை கணினி பயன்படுத்துதல், EMIS, Hi–Tech Lab மற்றும் ICT ஆகியவற்றில் திறன் வளர் பயிற்சிக்கான இரண்டாம் கட்ட கால அட்டவணை மாவட்டங்களுக்கு தெரிவித்தல்– சார்ந்து.

**பார்வை:** இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்: 1845 அ11/ பயிற்சி /ஒபக /2021 நாள்: 6.08.2021

*****

பார்வையில் கண்ட இவ்வலுவலகக் கடிதத்திற்கேற்ப 12500 அரசு பள்ளி முதுகலை ஆசிரியர்களுக்கு முதற்கட்டமாக இணைய வழியாக அடிப்படை கணினி பயன்படுத்துதல், EMIS, Hi–Tech Lab மற்றும் ICT ஆகியவற்றில் திறன் வளர் பயிற்சி ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மற்றும் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இரண்டாம் கட்டம் பயிற்சி 76804 முதுகலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 23.8.2021 முதல் 27.8.2021 வரை அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, பயிற்சி நன்முறையில் நடைபெறுவதற்கு தேவையான ஆயத்த பணிகள் அனைத்தையும் மாவட்டங்களில் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

இரண்டாம் கட்ட பயிற்சி 76804 ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ளதால் கூடுதல் கருத்தாளர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். எனவே மாவட்ட வாரியாக தேவைப்படும் கருத்தாளர் எண்ணிக்கை இணைப்பு 1–ல் கொடுக்கப்பட்டுள்ளது, கூடுதல் கருத்தாளர்களை

தற்பொழுது பயிற்சி பெற்ற முதுகலை ஆசிரியர்களிலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு தெரிவு செய்யப்பட கருத்தாளர்கள் EMIS ல் 19,8,21 க்குள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். அதில் தற்பொழுது பயிற்சி வழங்கிவரும் கருத்தாளர்களும் இடம்பெற வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிற்சி அளிக்கப்பட வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை விபரமும் இணைப்பு 2–ல் கொடுக்கப்பட்டுள்ளது. முதற்கட்ட பயிற்சி நடைபெறாத கரூர், தூத்துக்குடி மற்றும் திருப்பூர் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் தற்பொழுது பயிற்சி நடைபெறவுள்ளது.

இரு கருத்தாளர்கள் இணைந்து ஒரு குழுவாகும். ஒவ்வொரு கருத்தாளர் குழுக்களும் தற்பொழுது 200 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கவேண்டும்.

மேல்நிலைப் பள்ளியில் 20 கணினி இணைப்புகளும் (Thin Clients) உயர்நிலைப்பள்ளிகளில் 10 கணினி இணைப்புகளும் உள்ளன, எனவே ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியில் 18 ஆசிரியர்களும் உயர்நிலைப்பள்ளிகளில் 8 ஆசிரியர்களும் பங்கு கொள்ளத்தக்க வகையில் பயிற்சி திட்டமிடப்பட்டுள்ளது.

பயிற்சிக்கான கால அட்டவணை ( நாள் 1 முதல் நாள் 4 வரை)

| Time | Transaction( 1 to 4 days) | 5 th day |
|---|---|---|
| 09:00 am - 10:00 am | Attendance in **exams.tnschools.gov.in/login** | |
| 10:00 am - 10:30 am | Welcome & Briefing (through Central YouTube channel) | |
| 10:30 am - 1.00 pm | Video based self learning & hands on training (By District Resource person through YouTube channel) | Recap by District Resource person through YouTube channel) |
| 1.00 pm - 02:00 pm | Lunch | |
| 02:00 pm - 02:45 pm | Doubt clearing session(through Central YouTube channel) | Recap by District Resource person through YouTube channel) |
| 02:45 pm - 03:00 pm | Login for assessments | |
| 03:00 pm 03:30 pm | Assessments in **exams.tnschools.gov.in/login** | |
| 03:30 pm - 04:00 pm | Submission of assignments | |

- பயிற்சியில் பங்கேற்கும் அனைத்து ஆசிரியர்களும் **exams.tnschools.gov.in/login** url மூலம் உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தில் உள்ள கணினியில் மட்டுமே காலை 9.00 மணி முதல் 10.00 மணிக்குள் தங்கள் வருகையினை கண்டிப்பாக EMIS ல் பதிவு செய்தல் வேண்டும்.
- ஒவ்வொரு நாளும் மாநிலம் முழுவதும் பயிற்சியில் கலந்து கொள்ளும் அனைத்து ஆசிரியர்களுக்கும் காலை 10.00 மணி முதல் 10.30 மணி வரை மாநில தலைமையிடமிருந்து (SCERT / SS) கருத்தாளர்கள் மூலம் நேரடியாக you tube வழியாக பயிற்சி அளிக்கப்படும்.
- காலை 10.30 மணி முதல் 1.00 மணி வரை பயிற்சியானது மாவட்ட கருத்தாளர் குழுக்கள் மூலம் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்கு you tube வழியாக செய்முறை பயிற்சி (Hands on) அளிக்க வேண்டும்.
- ஆசிரியர்கள் கற்றுக் கொண்டதை கணினியில் செய்முறை பயிற்சி மேற்கொள்ளும் பொழுதும் மாவட்ட கருத்தாளர்கள் / உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தின் பொறுப்பு ஆசிரியர்களும் உதவி புரிய வேண்டும்.
- கருத்தாளர் குழுவிலுள்ள ஒரு கருத்தாளர் பயிற்சியினை நேரடியாக you tube வழியாக கலந்துரையாடும் பொழுது மற்றொரு கருத்தாளர் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பள்ளிகள் அனைத்தும் இணைப்பில் வந்துள்ளனரா என்பதை உறுதி செய்யவும் ஆசிரியர்களால் chat box ல் பதிவு செய்யப்படும் கேள்விகளுக்கு பதில் அளிக்க உதவ வேண்டும்.
- பிற்பகல் 02.00 மணி முதல் 02.45 மணி வரை மாநிலம் முழுவதும் பயிற்சியில் கலந்து கொள்ளும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எழும் சந்தேகங்களை மாநில தலைமையிடமிருந்து (SCERT / SS) கருத்தாளர்கள் மூலம் you tube வழியாக நிவர்த்தி செய்யப்படும்.
- பயிற்சிக்கு வந்துள்ள அனைத்து ஆசிரியர்களும் பிற்பகல் 1.00 மணி முதல் 3.00 மணிக்குள் மதிப்பீட்டிற்கு **exams.tnschools.gov.in/login** url மூலம் உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தில் உள்ள கணினியில் மட்டுமே பதிவு செய்ய வேண்டும்.
- பிற்பகல் 3.00 மணி முதல் 03.30 மணிக்குள் அனைத்து ஆசிரியர்களும் தங்களது மதிப்பீட்டினை முடித்தல் வேண்டும்.

- பயிற்சியில் பங்கேற்ற அனைத்து ஆசிரியர்களும் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஒப்படைப்பினை (Assignment) பிற்பகல் 03.00 மணி முதல் 04.00 மணிக்குள் நிறைவு செய்து கருத்தாளர் குழுவிற்கான மின்னஞ்சலுக்கு அனுப்புதல் வேண்டும்.
- ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் பயிற்சி நிறைவடைந்ததும் **TN EMIS App யில்** Teacher ID (8 digit) மற்றும் password யினை பயன்படுத்தி login செய்து தங்கள் **பின்னூட்டத்தினை கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும்,**
- மேலும் வருகைபதிவு செய்யாத ஆசிரியர்கள் மற்றும் மதிப்பீட்டினை மேற்கொள்ளாத ஆசிரியர்களுக்கு **குறுஞ்செய்தி ( SMS) அனுப்பப்படும்**. அக்குறுஞ்செய்தி பெறப்பட்ட ஆசிரியர்கள் உடனே அதற்கான விளக்கத்தினை **TN EMIS App யில்** Teacher ID (8 digit) மற்றும் password யினை பயன்படுத்தி login செய்து 24 மணி நேரத்திற்குள் பதிவு செய்ய வேண்டும்,
- பயிற்சியிக்கான காணொளிகள் நாள்வாரியாக உயர் தொழில் நுட்ப ஆய்வகத்திலுள்ள server ல் Educational content என்ற folder ல் upload செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் பயிற்சியிக்கான காணொளிகளை அதன் மூலம் காணலாம்.

**ஆசிரியர்கள் சுய பதிவு செய்வதற்கான வழிமுறைகள்**

- ஆசிரியர்கள் இப்பயிற்சியில் பங்கேற்க EMIS ல் தாங்களாகவே பதிவு செய்ய வேண்டும்,
- அதற்கான வழிமுறைகள் பின்வருமாறு
    - ❖ Android கைப்பேசியில் TN EMIS App யினை பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும்.
    - ❖ TN EMIS App யில் Teacher ID (8 digit) மற்றும் password யினை பயன்படுத்தி login செய்ய வேண்டும். Password, EMIS யில் பதிவு செய்யப்பட்ட கைப்பேசியின் முதல் நான்கு இலக்கு @ பிறந்த வருடம்.
    - ❖ Login செய்ததும் click Teacher Training Module
    - ❖ Select training யினை Click செய்யவும். அதில் தற்பொழுது கலந்துக்கொள்ளும் பயிற்சியின் தலைப்பினை (ICT training) தெரிவு (Select) செய்ய வேண்டும்.

- ❖ பின்பு பயிற்சி மையத்தினை (Training Venue) Click செய்யவும். ஒன்றியத்திலுள்ள (Block) அனைத்து உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் உள்ள (Hi–Tech Lab) பள்ளியின் பெயர்கள் காட்சிபடுத்தப்படும். அதில் பயிற்சியில் கலந்துக்கொள்ள தங்கள் பள்ளி மையமாக இருப்பின் அப்பள்ளியினை தெரிவு(Select) செய்து submit/save செய்ய வேண்டும். தங்கள் பள்ளி பயிற்சி மையமாக இல்லை எனில் அருகிலுள்ள பள்ளியின் பெயரை தெரிவு(Select) செய்து submit/save செய்ய வேண்டும்.
- ❖ அவ்வாறு submit/save செய்யும் பொழுது அம்மையத்தில் பயிற்சியில் கலந்துக்கொள்ள காலியிடம் இருக்கும் பட்சத்தில் Registered successfully என காண்பிக்கப்படும்.
- ❖ இவ்வாறு ஆசிரியர்கள் தங்களுக்கான பயிற்சி மையங்களை தெரிவு செய்து வரும் பொழுது அம்மையங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை குறைந்துக் கொண்டு வரும்.
- ❖ எனவே ஆசிரியர்கள் login செய்யும் பொழுது உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தில் உள்ள கணினி இணைப்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப காலியாக இருக்கும் பயிற்சி மையங்களின் பெயர் மட்டுமே காண்பிக்கப்படும்.

- இவ்வாறு ஆசிரியர்கள் தாங்களாகவே சுயமாக பதிவு செய்துள்ளதை மாவட்ட அலுவலர்கள் தெரிந்துக்கொண்டு கண்காணிப்பதற்கு ஏதுவாக CEO login/ DC login மூலம் Dashboard யில் உடனுக்குடன் தெரிந்துக்கொள்ளலாம்.

இப்பயிற்சியானது மாவட்டங்களில் செவ்வனே நடைபெற மாவட்ட அலுவலர்கள் கீழ்க்கண்டவாறு திட்டமிட அறிவுறுத்தப்படுகிறது.

- உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியில் உள்ள உயர் தொழில் நுட்ப ஆய்வகத்திலுள்ள கணினிகள் மற்றும் நிழல் பட வீழ்த்தி (LCD Projector) சரியாக இயங்குகிறதா என்பதை அதற்கான பொறுப்பு ஆசிரியர் மற்றும் மாவட்ட பொறுப்பாளரிடமிருந்து (கணினி வகைப்படுத்தநர்) உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- **ஒவ்வொரு ஆசிரியரும் EMISல் தங்களுடைய தொலைபேசி எண், மின்னஞ்சல், போன்ற அனைத்து விவரங்களையும் மேலும் தங்களது விவரம் முழுவதும்**

**தற்பொழுது பணிபுரியும் பள்ளியில் உள்ளனவா என்பதையும் கண்டிப்பாக சரிபார்க்க வேண்டும். பயிற்சி விவரங்கள் மற்றும் மதிப்பீடு விவரங்கள் அனைத்தும் ஆசிரியரின் தொலைபேசி எண், மின்னஞ்சல் வாயிலாக மட்டுமே பகிர்ந்து கொள்ளப்படும்.**

- மாவட்ட கருத்தாளர் குழுக்கள் நேரடியாக youtube வழியாக இடையூறின்றி பயிற்சி அளிக்க ஏதுவாக நன்கு இணைய வசதியுள்ள இடத்தினை தெரிவு செய்து அளிப்பது மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் பொறுப்பாகும். மேலும் கருத்தாளர்களுக்கு தேவையான laptop, web camera, headphones மற்றும் இணையவசதி ஆகியவற்றை முதன்மைக் கல்வி அலுவலர்கள் ஏற்படுத்தி தர வேண்டும்.
- உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தின் பொறுப்பு ஆசிரியர், பயிற்சியின் அனைத்து நாள்களிலும் உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தில் இருக்க அறிவுறுத்தப்பட வேண்டும்.
- இவ்வாறு ஆசிரியர்கள் தாங்களாகவே சுயமாக பதிவு செய்துள்ளதை மாவட்ட அலுவலர்கள் தெரிந்துக்கொண்டு கண்காணிப்பதற்கு ஏதுவாக CEO login/ DC login மூலம் Dashboard யில் உடனுக்குடன் தெரிந்துக்கொள்ளலாம்.

66 உயர் தொழில் நுட்ப ஆய்வகங்களில் மட்டும் சில தொழில் நுட்ப காரணங்களினால் பயிற்சி மையங்களாக தெரிவு செய்யப்படவில்லை. அதன் விவரம் இத்துடன் இணைப்பு– 3 ல் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியினை ஆசிரியர்கள் உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தில் இருந்து மட்டுமே பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும். இதில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்று ஒவ்வொரு நாளும் மதிப்பீட்டினை நிறைவு செய்வதை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் உறுதிபடுத்த வேண்டும். பயிற்சி நடைபெறும் அனைத்து நாள்களிலும் உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தில் Hand Sanitizer (கிருமி நாசினி) வைத்திருப்பதையும் உறுதிபடுத்த வேண்டும். ஆசிரியர்கள் அனைவரும் முக கவசம் அணிந்து பயிற்சிக்கு வர வலியுறுத்த வேண்டும். மேலும் பெருந்தொற்று காலத்தில் அரசால் வெளியிடப்பட்டுள்ள நிலையான வழிக்காட்டு நெறிமுறைகளை கடைபிடிக்க வலியுறுத்தப்பட வேண்டும்.

எனவே 23.08.2021 முதல் 27.08.2021 வரை நடைபெறவுள்ள பயிற்சியில் சுய பதிவு செய்துள்ள ஆசிரியர்கள் தவறாது பங்கேற்று பயிற்சியினை நிறைவு செய்வதற்கு தக்க நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் பயிற்சியின் பொழுது பயிற்சி மையங்களை

மேற்பார்வையிடும் பணியினை மேற்கொள்ளுமாறும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்ட திட்ட அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:**

1. மாவட்ட கருத்தாளர் எண்ணிக்கை
2, மாவட்டத்தில் பயிற்சி அளிக்கப்பட வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை விபரம்
3, 66 உயர் தொழில் நுட்ப ஆய்வகங்களின் பெயர் பட்டியல்

18/8/21.

**மாநில திட்ட இயக்குநர்**

**நகல்:**

1. ஆணையர், பள்ளிக் கல்வி ஆணையரகம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது
2. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் அவர்களுக்கு தகவலுக்கா அனுப்பப்படுகிறது